Arimā Nōkku

# அரிமா நோக்கு

7:2 சூலை 2013

ரூ.30

ISSN 2320-4842

ஆசிரியர்: ஈரோடு தமிழன்பன்



மொழி, இலக்கியம், கலை, பண்பாடு, வரலாறு, மெய்யியல், அறிவியல்சார் பன்னாட்டுக் காலாண்டிதழ்

International Quarterly on Language, Literature, Art, Culture, History, Philosophy and Science

அரிமா நோக்கு
7:2 சூலை 2013


இராவுரி பரத்வாஜா
- வ. ஜெயதேவன் 03

திருக்குறளில் நீதிக்கோட்பாடு
- நீதிபதி மு. புகழேந்தி 04

The Conjugal Bond in Shashi Deshbonde's That Long Silence
- N. Prema 11

Structural Semantics in Sangam Tamil
- M. Moovendan & P. Manimaran 14

சித்தாந்த சிகாமணி
- தி. க. நாகராசன் 17

இரணியல் கலைத்தோழனின் நாடகங்களில் சமூகம்
- சா. கலைப்புனிதன் 21

மரபிலக்கணத் தமிழ்க் கல்வியும் பயன்பாட்டுத்தமிழ் இலக்கணமும்
- இல. சுந்தரம் 25

குறிப்புவினை: மறு பார்வை
- இரா. கோதண்டராமன் 29

தொல்காப்பியமும் தொடரிலக்கணமும்
- கி. அரங்கன் 35

பெத்லகேம் குறவஞ்சி...
- பா. மீனாகுமாரி 41

வேற்றுமைப் பொருள்களின் இரு நிலை
- ரா. செயராமன் 45

அட்ரைன் ரிச்
- இரா. பிரேமா 51

தமிழ் யாப்பியல்: ஜீ. யூ. போப்பின் பங்களிப்பு
- ய. மணிகண்டன் 55


# தலைவாயில்

ஈரோடு தமிழன்பன்

## பதிப்பாசிரியர் பண்பும் பயனும்

தமிழ் எழுத்துலகில் படைப்பாசிரியர், தொகுப்பாசிரியர், உரையாசிரியர், பதிப்பாசிரியர் என்கிற தொழிற்பாட்டுத் தளங்கள் பல இருக்கின்றன. ஆயின் முதல் மூன்று தளங்களின் பயன்பாடுகள் பதிவாகிற அளவு பதிப்பாசிரியர் பங்கு பதிவாவதில்லை. பதிப்பாசிரியர் 'இல்லாததுபோல் இருந்து' வெளிளீயீட்டாளருள் ஓரிடம் தேடி ஒதுங்கிக் கொள்ளும் நிலை. எழுத்தாக்கம் என்னும் முதன்மைய நிலையை நெருங்கி நிற்பதோடன்றி, ஏனைய தொகுப்பாசிரியர், உரையாசிரியர் பணிகள் மீதும் பார்வையும் பரிவும் செலுத்தும் ஒரு பெருந்தகுதியாளர் என்கிற இடத்தைப் பதிப்பாசிரியர் பெறுவது அவரது உரிமை எல்லைக்குள் இருப்ப தாகவே கருதவேண்டும்.

இலக்கிய வரலாறு, திறனாய்வுகள், செல்நெறிகள், சந்தைப்படுத்திப் படைப்பைப் பரவலாகக் கொண்டு செலுத்துதல், தகுந்த முகவர்களைத் தெரிவுசெய்து வைத் திருத்தல் என்பன கூடப் பதிப்பாசிரியர் திறன்களாகவே கருதப்படுகின்றன பிற சில நாடுகளில். இன்னும் கூர்ந்து பார்வை படர்ந்தால், நூலாசிரியர் செய்யத் தவறியவை, செய்யவேண்டியவை, செய்யத்தக்க இயல்பின், அளவின் எல்லை கள் - இப்படியான படைப்புத் தொழிற் கூறுகளுள் அக்கறையோடு கவனம் செலுத்தி ஒரு வகையில் நூலாசிரியரைப் புடம்போட்ட பொன்னாக மாற்றும் வழிகாட்டியாகிப் பதிப்பாசிரியர், படைப்பாளியோடு ஒரு சமன்பாட்டை நிறுவிக் கொள்கிறார் என்பது தெளிவாகும்.

ஒரு நூலைப் பதிப்பிக்க அடிப்படை விதிமுறைகளாக, நூலை முழுமையாகக் கவனித்துப் படித்தல், பதிப்பிப்பதற்கெனப் புத்தகத்தையே எழுதுதல், பதிப்பிக்க விரும்பும் புத்தகத்தைத் தேடிப்பிடித்தல், வாக்கியத் தொடக்கம்-தொடர்ச்சி-முடிவு களையும், புள்ளிகள், குறியீடுகள் பொருத்தங்களையும் காணுதல், எதனையும் விட்டுவிடாதிருத்தல், இப்படிப் பதிப்பு நிறைவேற்றம் செய்கையில், அடிக்குறிப்பு கள், ஆண்டு, தேதிகள் பதிவுசெய்யப்பட்ட பாங்கைச் சரிபார்த்தல், மறுமுறை செம்மைத் தட்டச்சுப்படுத்துதல், முழுமையாக மீண்டும் படித்து உளநிறைவு காணுதல் என்று இப்படிப் படிமுறை நியமங்களாக எடுத்துரைக்கப்படுபவை எவ்வளவோ உண்டு.

சில நூல்கள், பதிப்புச்சிறப்பாலேயே வெற்றிமுகட்டை எட்டிப் பிடித்திருக்கின்றன. புகழ்மிக்க ஆங்கிலக் கவிஞர் டி. எஸ். எலியட்டின் 'பாழ்நிலம்' என்னும் பனுவல் எஸ்ரா. பாவுண்டாலேதான் பதிப்பிக்கப்பட்டது. ஈவு இரக்கம் இன்றி, பவுண்டு எத்தனையோ வரிகளை வெட்டினார், மாற்றினார், திருத்தினார். முடிவில் 'பாழ்' நிலம் திருத்தங்களும் செம்மையும் பெற்று எலியட்டுக்குப் புகழ் வாழ் நிலமாக மாறியது. ஆனால் படைப்பின் உயிர்ப்பையே சிதைத்துச் சின்னாபின்னமாக்கி விடும் பதிப்பாசிரியர் கைக்கு ஒரு நூல் போகுமெனில் அது நூலாசிரியரைத் தூக்கில் போடும் கொடுமையாகவே முடியும்.

வெளியீட்டாளருக்கு, தமது வெளியீடு, பல இடங்களிலும் பரவி முதன்மையாகப் பணத்தையும் முடிந்தால் பணத்தில் குறிவைக்கக்கூடிய விளம்பரத்தையும் புகழை யும் திரட்டி வரவேண்டும் என்பது நோக்கமாக இருக்கும். படைப்பாளனுக்கும் தனது நூல் பரவலாகப் படிக்கப்பட வேண்டும், திறனாய்வு, மதிப்பீடுகள் செய்யப் பட வேண்டும் என்பதோடு கூட, பரிசுகளும் பணமும் வந்து சேரவேண்டும் என்கிற நோக்கமும் இல்லாமற் போகாது. புத்தகச்சந்தையில் தோற்றுப்போய்விடாமல், கவனிக்கப்பட வேண்டிய நுணுக்கங்கள் தேர்ந்த வணிகப் பாத்திரத்தையும் பதிப்பாசிரியனே ஏற்கும் நிலைமையும் உண்டு. நம்மிடையே இன்று வாழ்ந்துவரும் உலகப் புகழ் பெற்ற இயற்பியல் மேதை ஸ்டீபன் ஆவ்கிங் எழுதிய நூல் 'காலத்தின் ஒரு சுருக்கமான வரலாறு'. அதனை வெளியிட்ட பேண்டம்

பதிப்பகத்துப் பதிப்பாசிரியர்களில் ஒருவரான பீட்டர் குஜ்ஜார்டி என்பவரின் கடுமையான பதிப்பு நெறிமுறைகளுக்கு உட்பட்டதாலேயே வெற்றி பெற்றது. மகளின் பள்ளிக் கட்டணத்துக்குப் பணம் கிடைக்குமா என்று ஏங்கிய ஸ்டீபனின் கவலையை நீக்கியது. இந்நூல் இன்று உலகில் இருபதுக்கும் மேற்பட்ட மொழிகளில் மொழிபெயர்ப்பாகியுள்ளபோதிலும் முதல் பதிப்பாசிரியர் முகவரியிலேயே அதன் அறிமுகம் எங்கெங்கும் நிகழ்ந்தது. தமிழ் வெளியீட்டுலகம், படைப்புலகம் இரண்டுமே இன்னும் பதிப்பாசிரியப் பாத்திரத்தின் பண்பையும் பயனையும் தக்கவாறு அறியவில்லை. ◆


*ஆசிரியர்*

ஈரோடு தமிழன்பன்

*இணையாசிரியர்*

*(மதிப்புறு நிலை)*

வ. ஜெயதேவன்

*ஆசிரியர் குழு*

சிலம்பொலி சு. செல்லப்பன்

கா. செல்லப்பன்

இரா. இளவரசு

நா. கணேசன் (அமெரிக்கா)

நா. சுப்பிரமணியன் (கனடா)

பொன். செல்வகணபதி

நா. முத்துக்குமார்

சீதாலட்சுமி (சிங்கப்பூர்)

மு. பரமசிவம் (மலேசியா)

பத்மாவதி விவேகானந்தன்

இரா. பிரேமா

பா. இரவிக்குமார்

மருதூர் அரங்கராசன்

பெ. இலக்குமிநாராயணன்

எஸ். ஏ. சங்கர நாராயணன்

*அறிவுரைக் குழு*

இந்தியாவிலும் அயல் நாடுகளிலும் உள்ள தமிழியல் அறிஞர்கள், பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் மற்றும் படைப்பாளிகள்

*பதிப்பாளர்*

இரா. பன்னிருகைவடிவேலன்


## கட்டண விவரம்

| | | | |
|---|---|---|---|
| வாழ்நாள் கட்டணம் | ரூ. | 3000/-US | $ 150 |
| புரவலர் கட்டணம் | ரூ. | 5000/- US | $ 200 |
| நிறுவனம் சார் உறுப்பினர் (Institutional Membership) | ரூ. | 10,000/- US | $ 500 |

- நிறுவனம்சார் உறுப்பினர்களுக்கு அவர்களுடைய வாழ்நாள் முழுதும் அரிமா நோக்கு இதழ் அனுப்பப்படும்; நோக்கு வெளியிடும் ஒவ்வொரு நூலுக்கும் 50% சிறப்புக் கழிவும் உண்டு.
- புரவலர்களுக்கு அவர்களுடைய வாழ்நாள் முழுதும் அரிமா நோக்கு இதழ் அனுப்பப்படும்; நோக்கு வெளியிடும் ஒவ்வொரு நூலுக்கும் 40% சிறப்புக் கழிவும் அளிக்கப்படும்.
- வாழ்நாள் உறுப்பினர்களுக்கு அவர்களுடைய வாழ்நாள் முழுதும் அரிமா நோக்கு இதழ் அனுப்பப்படும்; நோக்கு வெளியிடும் ஒவ்வொரு நூலுக்கும் 30% சிறப்புக் கழிவும் அளிக்கப்படும்.

**விளம்பரக் கட்டணம்**

| | | |
|---|---|---|
| பின்னட்டை (பல வண்ணங்கள்) | ரூ. | 15,000 |
| உள்ளட்டை (பல வண்ணங்கள்) | ரூ. | 10,000 |
| முழுப்பக்கம் (கருமை & வெண்மை) | ரூ. | 3,000 |
| அரைப்பக்கம் (கருமை & வெண்மை) | ரூ. | 1,500 |

*தொடர்ந்து ஓராண்டு (நான்கு இதழ்களுக்கு) அளிக்கப்படும் விளம்பரங்களுக்கும் 10% சிறப்புக் கழிவு உண்டு. முன்பணம் செலுத்தி முகமை பெற விழையும் முகவர்களும் இவ்விதழில் விளம்பரம் செய்ய விழையும் வாணிகம் மற்றும் விளம்பர முகமை நிறுவனத்தாரும் தொடர்பு கொள்ளலாம்.*

**கட்டணம் செலுத்த:**

DD in favour of *'Nokku'* payable at Chennai

Indian Overseas Bank (IFSC Code: IOBA0001681)


## அரிமா நோக்கு

4/1083 நேரு நகர், 2ஆவது முதன்மைச் சாலை

கொட்டிவாக்கம், சென்னை 600 096

வலைத்தளம்: www. arimaanokku.com

மின் அஞ்சல்: arimaanokku@hotmail.com செல்: 9380626448




Email : custom...